**செய்தி வெளியீடு எண்: 332** **நாள்: 17.05.2018**

# செய்தி வெளியீடு

குழந்தையின் ஆரம்ப கால வளர்ச்சி என்பது குழந்தை கருவில் உருவான நாள் முதல் 6 வயது வரை ஏற்படுகின்ற உடல், மனம், மொழி மற்றும் சமூக வளர்ச்சி ஆகும். ஆரம்ப கால குழந்தை வளர்ச்சி குறித்த கருத்த கருத்தரங்கு 17.5.2018 மற்றும் 18.5.2018 ஆகிய தேதிகளில் ஹோட்டல் ராஜ்பார்க், ஆழ்வார்பேட்டையில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் மற்றும் யுனிசெப் இணைந்து நடத்தப்பட்டது. இந்த கருத்தரங்கு மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை அமைச்சர் டாக்டார் திருமதி.வி.சரோஜா அவர்கள் தலைமையேற்று குத்துவிளக்கேற்றி இக்கருத்தரங்கினை தொடங்கி வைத்தார். இவ்விழாவில் சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை முதன்மை செயலர் டாக்டர் க.மணிவாசன், இ.ஆ.ப., ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட இயக்குநர் திரு.ரா.கண்ணன், இ.ஆ.ப. மற்றும் யுனிசெப் தலைமை பிரதிநிதி, தமிழ்நாடு, கேரளா மாநிலம் திரு.ஜோப் சக்காரியா அவர்கள் முன்னிலையேற்று சிறப்புரை ஆற்றினார்கள். இவ்விழாவில் மாநிலம் முழுவதிலும் இருந்து சுகாதாரத்துறை, கல்வித்துறை, சமூகநலத்துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சமூக பாதுகாப்புத் துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், அரசுத்துறை சார்ந்த நிறுவனங்களான நிப்மெட், நிப்சிட், தன்னார்வ தொண்டு நிறுவனங்களை சார்ந்த அலுவலர்கள், களப்பணியாளர்கள் 130 பேர் பங்கு பெற்றனர்.

பல துறைகள் மூலம் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வந்தாலும், குழந்தைகளின் ஆரம்பகால வளர்ச்சிக்கு அனைத்து துறைகளிலும் திட்டங்களை ஒருங்கிணைத்து இலக்குகளை நிர்ணயம் செய்து செயல்படுத்தும் முறையை வகுப்பது இக்கருத்தரங்கின் முக்கியமான நோக்கமாக உள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**